## தமிழ்நாட்டில் குற்றம் நடந்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது!

# குற்றவாளிகள் கைது செய்யப்படுகிறார்கள், விசாரணை நடைபெறுகிறது, நியாயமான தீர்ப்பு கிடைக்கிறது!

## விளாத்திகுளம் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி பேச்சு!

**தூத்துக்குடி, ஏப்.15-**

**தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் மார்கண்டேயனை ஆதரித்து, விளாத்தி குளம் பேருந்து நிலையம் அருகில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.**

இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது :-

இங்கு வேட்பாளராக நமது முதலமைச்சர் தேர்ந்தெடுத்து, கைகளில் ஒப்படைத்துள்ள வெற்றி வேட்பாளர் மார்கண்டேயன். இந்த உச்சி வெயில் நேரத்திலும் உதயசூரியனுக்காக வாக்கு கேட்க வந்திருக்கும் எங்களுக்கு ஆதரவளிக்க இத்தனை பேர் நின்றிருப்பதைப் பார்க்கும் போது, வெற்றி உறுதி என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

நம்முடைய வேட்பாளர் அழகான தமிழில் பேசக்கூடியவர். அதே நேரத்தில் மக்களைப் புரிந்துகொள்ளக்கூடியவர். உங்களுடைய எல்லா கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்காக பாடுபடக்கூடியவர்.நீங்கள் அழைக்கும் குரலுக்கு ஓடோடி வந்து, உங்களோடு நின்று பணியாற்றக்கூடியவர்.

இந்தத் தொகுதியின் ஒவ்வொரு பகுதியிலும் என்ன பிரச்சினை உள்ளது, என்ன தேவைகள் உள்ளன, யார் என்ன என்பது அனைத்தையும் தெரிந்து வைத்திருக்கும் ஒருவர்தான் இன்று நம்முடைய வேட்பாளராக, நமது முதலமைச்சர் நமக்காக அளித்துள்ள வேட்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மக்களைச் சந்தித்து வாக்கு கேட்கும் போது, உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்திருக்கிறோம் என்ற உரிமையுடன் வந்து வாக்கு கேட்கிறோம். வேறு யாரும் இதைச் சொல்ல முடியாது. ஏனெனில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தரும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகமே.

அதிமுக ஏதாவது நிறைவேற்றியிருக்கிறார்களா? இல்லை. 2016ஆம் ஆண்டின் அதிமுக தேர்தல் அறிக்கையில், 27ஆம் பக்கத்தில் எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் செல்போன் வழங்குவோம் என்று கூறியிருந்தார்கள்.

அந்த செல்போனை பெற்றவர்கள் இந்தக் கூட்டத்தில் யாராவது இருக்கிறீர்களா? ஒருவராவது இருக்கிறீர்களா? வாங்கியவர்களை யாராவது அறிவீர்களா? தமிழ்நாடு முழுவதும் கேட்கிறேன்—யாருக்கும் தெரியவில்லை. இதுதான் அவர்கள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் லட்சணம்.



**உதய்மின் திட்டத்தில் கையெழுத்திட்ட பழனிசாமி!**

தேர்தல் அறிக்கையில் கூறிய எதையும் நிறைவேற்றாமல், எடப்பாடி பழனிசாமி சுற்றி வந்து “எனக்கு ஓட்டு போடுங்கள்” என்றால், எதற்காக மக்கள் அவருக்கு வாக்களிக்க வேண்டும்?

அவர் சொல்கிறார்: “நான் ஒன்றிய அரசாங்கத்துடன் இணக்கமாக இருந்து திட்டங்களை கொண்டு வந்தேன்” என்று. என்ன திட்டங்களை கொண்டு வந்தீர்கள்? ஒன்றும் கொண்டு வரவில்லை.

நீட் தேர்வை கொண்டு வந்து, பல பிள்ளைகள் மருத்துவக் கல்லூரிக்கு செல்ல முடியாத நிலையை உருவாக்கினீர்கள். அதையும் தாண்டி, உதய்மின்திட்டத்தில் கையெழுத்திட்டு, இன்று மின்கட்டணம் உயர்ந்து கொண்டே போவதற்கு காரணமாக இருந்தவர் எடப்பாடி பழனிசாமி.

இஸ்லாமியர்களுக்கு எதிரான சட்டங்கள் கொண்டு வரப்பட்டபோது, அதை மௌனமாக ஏற்றுக்கொண்டவர் எடப்பாடி பழனிசாமி. விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் எதிரான சட்டங்கள் கொண்டு வரப்பட்டபோதும், அதற்கு எதிர்த்து பேசாமல் இருந்தார்.

என்னை காப்பாற்றினால் போதும், என்மீது வழக்குகள் பதிவு செய்யாமல் இருந்தால் போதும்; யார் எப்படிப் போனாலும் பரவாயில்லை” என்று நினைத்தவர்தான் எடப்பாடி பழனிசாமி.

ஆனால், தமிழ்நாடு இன்று அனைத்து துறைகளிலும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதிக அளவில் தொழில்முதலீடுகள் வரக்கூடிய மாநிலம் தமிழ்நாடு. சுகாதாரத் துறையில் மற்ற மாநிலங்களை விட முன்னேறிய மாநிலமும் தமிழ்நாடுதான்.

வேலைவாய்ப்புகளை அதிக அளவில் வழங்கிக் கொண்டிருக்கும் மாநிலம் தமிழ்நாடு. அதேபோல், தனிநபர் வருமானம் மிக அதிகமாக உள்ள மாநிலங்களில் ஒன்றும் தமிழ்நாடுதான்.

உலகம் முழுவதும் உள்ள தொழில் முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் வந்து முதலீடு செய்ய முன்வரும் மாநிலம் தமிழ்நாடு. இவை அனைத்தும், ஒன்றிய அரசு நமக்கு எதிராக இருக்கும் நிலையிலும் சாதித்து காட்டிய முதலமைச்சரின் சாதனைகள்.

ஆனால், திரும்பத் திரும்ப நம்மை எதிர்த்து ஒரே விஷயத்தையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், அது ஒரு பொய். ஏனெனில், நம்மை எதிர்த்து சொல்லுவதற்கு அவர்களிடம் எதுவும் இல்லை.

பாஜக பொய்களை நன்றாகச் சொல்ல கற்றுக் கொடுக்கிறது. “வாட்ஸ்அப் யூனிவர்சிட்டி” நடத்துகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதை கற்றுக்கொண்டு, எடப்பாடி பழனிசாமியும் பாஜகவும் தமிழ்நாட்டில் அமைதி இல்லை, பெண்களுக்கு பாதுகாப்பில்லை என்று கூறுகின்றனர். ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்ற இந்த ஆட்சி பெண்களுக்கான ஆட்சி என்று நான் பெருமையுடன் சொல்லுவேன்.

**பா.ஜ.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பின்மை!**

பெண்களுக்கான உரிமைத்தொகையை வழங்கிய ஆட்சி நம்முடைய ஆட்சி. அடுத்ததாக நம்முடைய ஆட்சி மீண்டும் வந்தவுடன், அந்தத் தொகை 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். பெண்களுக்காக இத்தனை நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் நம்மைப் பார்த்து, தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறுகிறார்கள்.

நான் ஒன்றே ஒன்றைக் கேட்கிறேன். நம்மை எதிர்த்து பேசக்கூடிய பாஜக, அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கும் மாநிலங்களில் நிலைமை என்ன? பெண்களுக்கு எதிராக ஒரு குற்றமும் நடைபெறக்கூடாது. ஒரு குற்றம் நடந்தால் கூட அது தவறுதான், நடக்கவே கூடாது.

ஆனால், அவர்கள் கூட்டணியில் உள்ள பாஜக ஆட்சி நடைபெறும் மாநிலங்களில், 2023ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை: உத்தரப் பிரதேசத்தில் 66,381, மகாராஷ்டிராவில் 47,101, ராஜஸ்தானில் 45,450, மத்தியப் பிரதேசத்தில் 32,342, தமிழ்நாட்டில் 8,943. இது எங்கும் இருக்கக்கூடாத ஒன்றுதான். ஆனால், இந்நிலையிலும் நீங்கள் இங்கே வந்து எங்களை குற்றம் சாட்டும் அருகதை உங்களுக்கு இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இங்கு ஒரு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்படும்போது, அந்த புகாரை பதிவு செய்து குற்றப் பத்திரிகை (Charge Sheet) தாக்கல் செய்கிறார்கள். 91 சதவீதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட மாநிலம் தமிழ்நாடு.

நடவடிக்கை எடுக்கப்படுகிறது. யாருக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறதோ, அதற்குக் காரணமானவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. விசாரணை நடைபெறுகிறது. நியாயமான தீர்ப்பு கிடைக்கிறது.

ஆனால், இவர்கள் கூட்டணியில் உள்ள பாஜக ஆட்சி நடைபெறும் இந்த நாட்டில், பல மாநிலங்களில் 70 சதவீதம் கூட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதில்லை. இதுதான் இன்று நிலவும் உண்மை.

இவர்கள் நம்மைப் பார்த்து தேர்தலுக்காக குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். அதைவிட, ஒவ்வொரு முறையும் நம்மைப் பார்த்து குற்றம் சாட்டும் அந்த நேரத்தில், எடப்பாடி பழனிசாமி ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பொள்ளாச்சியில் நடைபெற்ற குற்றங்களில், அங்கு குற்றம் செய்தவர்களை காப்பாற்றத் துடித்தவர் எடப்பாடி பழனிசாமி. ஆனால், நம்முடைய முதலமைச்சர் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுடைய பக்கம் நின்று ஒவ்வொரு முறையும் நியாயத்தை வழங்கியவர் நம்முடைய முதலமைச்சர்.

எதிர்க்கட்சியில் இருக்கும் பழனிசாமி அவர்கள், நாம் சில விமர்சனங்களை முன்வைத்தால் வருத்தப்படுகிறார். அவர் யாருடைய காலில் விழுகிறார் என்பதற்காக நமக்கு எந்த வருத்தமும் இல்லை.யாருடைய காலில் வேண்டுமானாலும் விழட்டும்; யாரிடமும் வேண்டுமானாலும் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளட்டும். அதைப் பற்றி நமக்கு எந்த அக்கறையும் இல்லை.

நீங்கள் யாருடைய காலில் விழுகிறீர்களோ, அந்தக் கால் பாதுகாப்பாக இல்லை, அதுதான் எங்களின் கவலை. காலில் விழுந்தவர்கள் பத்திரமாக இருக்க வேண்டும்; அதைத்தான் சொல்ல வருகிறோம்.

அம்மையார் சசிகலாவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்று முதலமைச்சராக ஆனீர்கள். அவர்தான் உங்களை முதலமைச்சராக ஆக்கினார். இன்று அவர்கள் எந்தக் கட்சியில் இருக்கிறார்கள்? அதிமுகவில் இருக்கிறார்களா?

அதிமுக அலுவலகத்திற்கே வர முடியுமா?

இவருக்கு முன்னர், முதலமைச்சராக அம்மையார் ஜெயலலிதா அவர்கள் நியமித்த ஓ.பி.எஸ். அவர்கள் இன்று எங்கே இருக்கிறார்? நம்மோடு இருக்கிறார். தமிழ்நாட்டைக் காப்பாற்றக்கூடிய ஒரே தலைவர் நம்முடைய அண்ணன் தளபதி அவர்கள்” என்று கூறி, நம்மோடு தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார்

தமிழ்நாட்டு மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளனர்—இவரை நம்பினால் கைவிடப்படுவோம் என்று. தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து துரோகம் செய்து கொண்டிருப்பவர்தான் எடப்பாடி பழனிசாமி.

இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் அவருக்கு ஒரு சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும். ஏனெனில், இந்தத் தேர்தலுக்குப் பிறகு, அமித்ஷா அவர்கள் விரும்பினால், கட்சியே கிட்டத்தட்ட அண்ணா திமுகவிலிருந்து “அமித்ஷா திமுக”வாக மாறிவிடும் நிலை உருவாகலாம்.

அதனால், அமித்ஷா அவர்கள் மனது வைத்தால், அவரை ஏதாவது ஒரு மாநிலத்திற்கு ஆளுநராக அனுப்பவும் முடியும். அவருக்கு பிடித்த மாநிலத்தைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்ளட்டும், அங்கு போகலாம்

இந்த தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் மகளிர் உரிமைத்தொகை பெற்றுக் கொண்டு இருப்பவர்கள் 3,24,074 பேர். நம்முடைய ஆட்சியில் விளாத்திக்குளத்தில் பனைப்பொருட்கள் குழுமம் கொண்டு வரப்பட்டது. அது மட்டுமல்லாமல், 363 ஊரகக் குடியிருப்புகளுக்கு தண்ணீர் வழங்கும் கூட்டுக்குடிநீர்த் திட்டம் 430 கோடி ரூபாய் மதிப்பில் கொண்டு வரப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணிய சுவாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இங்கு தொடங்கப்பட்டுள்ளது. விளாத்திக்குளம் அரசு மருத்துவமனைக்கு ரூ. 5 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டித்தரப்பட்டிருக்கிறது.

சிவஞானபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நம்முடைய தொகுதிக்கு மட்டும் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 7,464. என்னுடைய எம்.பி. நிதியிலிருந்து இந்தத் தொகுதிக்காக மட்டும் 4 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறேன். அதை உங்கள் சட்டமன்ற உறுப்பினர் உங்களுக்காகப் பெற்றுத் தந்துள்ளார்.

இதையெல்லாம் செய்து தருவதற்கும், சகோதரிகள் ஆவலுடன் காத்திருக்கக்கூடிய 8,000 ரூபாய் கூப்பனை வழங்குவதற்கும், எங்களுக்கு மீண்டும் ஒருமுறை நீங்கள் வாய்ப்பு வழங்க வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# “டெக்கான் கிரானிக்கல்” - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

**சாதகமான அலை வீசுவதால் மீண்டும் தி.மு.க. ஆட்சிதான்!**

**கேள்வி:-** *வேகமாக மாறிவரும் அரசியல் சூழலில், உங்கள் கட்சியின் எதிர்காலத்தை நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** கடந்த காலம் மற்றும் நிகழ்காலம் சரியாக இருந்தால்தான் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். கடந்த காலத்தைத் திரும்பிப் பாருங்கள். 2019 நாடாளுமன்றத் தேர்தல், 2019ஆம் நடைபெற்ற 22 சட்டமன்றத் தொகுதிகள் இடைத்தேர்தல்கள், 2019ல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற நகர்புற உள்ளாட்சித் தேர்தல், ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல் என தொடர் வெற்றிகளை திமுக பெற்று வருகிறது. அரசியல் சூழல்கள் மாறிக் கொண்டிருந்த நிலையிலும் இந்த சாதனையை நாங்கள் நிகழ்த்தியிருக்கிறோம்.

2018ஆம் ஆண்டு திமுக தலைமையில் உருவான கூட்டணியில் இடம்பெற்ற கட்சிகள் எங்களோடு தொடர்ந்து பயணித்து வருகின்றன. 2026 சட்டமன்றத் தேர்தலில் இன்னும் சில கட்சிகள் இணைந்திருக்கின்றன. ஐந்து ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு எங்களுக்கு Antiincumbency இல்லை. Pro Incumbency Wave தான் இன்று வீசுகிறது. திராவிட மாடல் 2.0 அமையும். திமுக தொடர்ந்து இரண்டாவது முறையும் ஆட்சிக்கு வரும்!

**கேள்வி:-** *இளம் வாக்காளர்கள் மத்தியில் உங்கள் கட்சி தொடர்ந்து பொருத்தமானதாக இருப்பதை உறுதிசெய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** இளம் வாக்காளர்கள் உட்பட அனைத்து வாக்காளர்களும் எங்களுக்கு ஆதரவான மனநிலையில்தான் உள்ளனர். 2021 தேர்தல் முடிவுகள் வெளியான அன்று கலைஞர் நினைவிடத்தில் நான் சொன்னதை மீண்டும் சொல்கிறேன். "எங்களுக்கு ஓட்டுப் போட்டவர்கள் நிச்சயம் மகிழ்ச்சி அடைவார்கள்; ஓட்டுப் போடாதவர்கள் எங்களுக்கு ஏன் வாக்களிக்கவில்லை என்று நினைத்து நிச்சயம் வருத்தப்படும் அளவுக்கு எங்களது பணி இருக்கும்” என்றேன். ஐந்தாண்டுகள் ஆட்சியில் அதை மெய்பித்திருக்கிறோம். “ஏன் திமுகவுக்கு வாக்களிக்காமல் விட்டோம் என வருந்துகிறேன். இந்தத் தேர்தலில் திமுகவுக்கு ஓட்டு போடுவேன்” என ஒருவர் பேசிய வீடியோ சமீபத்தில் வைரல் ஆனது. அதுதான் இன்றைய நிலை. அந்தளவிற்கு திராவிட மாடல் ஆட்சி அனைத்து மக்களையும் கவர்ந்துள்ளது. இளைய தலைமுறையினருக்காக “நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண், தமிழ்புதல்வன் திட்டம்” ஆகியவற்றைச் செயல்படுத்தியிருக்கிறோம். கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி (Laptop) வழங்கி வருகிறோம். நாங்கள் அமைத்துள்ள பிரம்மாண்ட நூலகங்கள் எல்லாம் இன்று போட்டித் தேர்வுக்குச் செல்லும் இளைஞர்களின் மையங்களாகத் திகழ்கின்றன. இது இளைஞர்களின் நலன்களுக்காக ஏற்றமிகு திட்டங்களை நிறைவேற்றியுள்ள அரசு! அதே நேரத்தில், கட்சியைப் பொறுத்த வரையில் மூத்த தலைவர்களுக்கு இணையாக இளம் பேச்சாளர்களுக்கு மேடை வாய்ப்புகள், அடிமட்ட அளவிலான மன்றங்கள், இளைஞரணி மாநாடுகள் ஆகியவற்றை நடத்தி வருகிறோம். இளைஞர்களை ஈர்க்கும் மாபெரும் இயக்கமாக திமுக இருக்கிறது என்பதை சென்னையில் மெட்ரோ ரயிலில் வாக்கு கேட்டபோது மட்டுமின்றி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நான் வாக்கு கேட்டுப் போகும்போது திரளும் இளைஞர்களின் இன்முகத்தில் காண்கிறேன்!

**கேள்வி:-** *இன்றைய சூழலில் இளம் அரசியல் தலைவர்கள் வெற்றி பெறுவதற்கு எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** மக்களைத் தேடிச் செல்ல வேண்டும். மக்களுக்காக ஓய்வின்றி உழைக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.

## இன்று தமிழ்நாட்டின் அனைத்து வீடுகளிலும் —

# பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏந்துவோம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

“Delimitation என்ற பெயரில், தனது லிமிட்டைத் தாண்டி, பா.ஜ.க. அரசு, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களை வஞ்சிக்கிறது! நாளை நாடாளுமன்றத்தில் பாஜக அரசு கொண்டு வரப் போகும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில், தமிழ்நாட்டில் அனைவரும் நம்முடைய வீட்டில் கருப்புக் கொடியை ஏற்றுவோம். கருப்புச் சட்டத்தை எதிர்த்து நம் எதிர்ப்பின் அடையாளமாக, கருப்புக் கொடியை ஏற்றுவோம். இந்தியாவை இருண்ட காலத்துக்கு அழைத்துக் கொண்டு போகும், எதேச்சதிகார பா.ஜ.க. அரசுக்கு எதிராக கருப்புக் கொடி ஏற்றுவோம்.” என மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்ட அறிக்கைக்கிணங்க;

அனைத்து கழக மாவட்டங்களிலும் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை என பட்டித்தொட்டி கிராமம் முதல் மாநகரங்களில் உள்ள அனைத்து இல்லங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் இன்று (16.4.2026) இந்தியாவை இருண்ட காலத்துக்கு அழைத்துக் கொண்டு போகும், எதேச்சதிகார பா.ஜ.க. அரசுக்கு எதிராக கருப்புக் கொடி ஏற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

**வெல்வோம் ஒன்றாக!**

**“அண்ணா அறிவாலயம்”**
**சென்னை18.**
**நாள் : 15.4.2026**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**



மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கிழக்கு ஒன்றியம் கள்ளந்திரி ஊராட்சியைச் சேர்ந்த தவெக இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் கலாநிதி, நேரு பாண்டியன், ஆசைக் கண்ணன், சசிகுமார், மதிவாணன், அழகுபாண்டி, மீராஜான், அன்பு, தளபதி ஜெகன், செல்வம், கள்ளந்திரி வேல்முருகன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்



மதுரை திருப்பரங்குன்றம் தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கிருத்திகா தங்க பாண்டியன் தொகுதிக்குட்பட்ட திருப்பரங்குன்றம் மற்றும் தனக்கன்குளம் பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் கழக நிர்வாகிகள் பெரியசாமி, கிருஷ்ணா பாண்டியன், ஆறுமுகம், சுவிதா விமல், பி.எஸ்.என்.எல்.செல்வம், காளீஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.